<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

<u>**M.C.O.P.No.269/2014**</u>

| | | |
|---|---|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கார்த்திக் |
| தகப்பனார் / கணவர் | .. | சக்திவேல் |
| வயது | .. | 26 |
| தொழில் | .. | சட்ட மேலாளர் |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | சென்னை |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் நாள் திங்கள்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை:</u>

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். விபத்து 03.01.2014 அன்று நடந்துள்ளது. ராகேஷ் என்பவர் அவருடைய தகப்பனாரை இருசக்கர வாகன பதிவெண் TN 20 CX 3970 என்ற பின்பக்கமாக உக்கார வைத்துக்கொண்டு செய்யாறில் இருந்து காஞ்சிபுரம் செல்லும் போது பாண்டியம்பாக்கம் கூட்ரோடு சாலை அருகே செல்லும்போது அவருடைய பின்னால் அந்த இருசக்கர வாகனம் பதிவெண் TN 20 AT 6682 என்ற வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார். அதனால் அவருடைய தகப்பனாருக்கு பலத்த காயமும், ராகேஷ் என்பவருக்கு சிராய்ப்பு காயமும் ஏற்பட்டதாக தூசி காவல் நிலையத்தில் 04.01.2014 அன்று புகார் அளித்ததன் பேரில் விபத்து நடந்த மறுநாள் முதல் தகவல் அறிக்கை 07/2014 பதிவு செய்யப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கை எ.சா.ஆ.1 ஆகும். ஆகவே

விபத்திற்கு காரணமான TN 20 AT 6682 ஓட்டுநர் மனுதாரரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் காரணம். எங்கள் நிறுவத்திற்கு எதிராக இழப்பீடு கோர முடியாது. ஒரே தேதியில் நடந்த விபத்திற்காக இரண்டு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதில் இரண்டாவது குற்ற எண்.343/2014, மேற்படி முதல் தகவல் அறிக்கை எ.சா.ஆ.2 ஆகும். எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

<u>குறுக்கு விசாரணை</u>

இரண்டு முதல் உள்ள தகவல் அறிக்கை உள்ள விவரத்தை நான் எனது எதிருரையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எங்களுடைய நிறுவனத்தின் சார்பில் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்த களப்பணியாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் பகுதியாக தாக்கல் செய்தார், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லலை. மேற்படி அறிக்கையில் ராகேஷ் என்பவர் மேற்படி குற்றத்தை செய்தார் என்று உள்ளதால் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் காயமுற்றதாக சொல்லப்படும் இரண்டும் நபர்களின் ஏர் நகல், விபத்து பதிவேடு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. ராகேஷ் என்பவருக்கு இந்த விபத்தினால் சிறு காயம் ஏற்பட்டது என்றும், இந்த வழக்கின் மனுதாரர் கோமாவில் சென்று சுமார் 40 நாட்கள் தொடர் சிகிச்சையில் இருந்தார் என்றால் தெரியாது. ராகேஷ் என்பவர் சிறுகாயம் என்பதால் மேற்படி விபத்து வழக்கில் இருந்து தப்பிப்பதற்கு முதலில் காவல் நிலையத்தில புகார் கொடுத்துள்ளார் என்றும், இம்மனுவின் மனுதாரர் தொடர் சிகிச்சையில் இருந்ததால் 10 நாட்கள் கழித்து அவருடைய தந்தை புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் மேற்படி புகாரை ஏற்றுக்கொள்ளாத காரணத்தானல் நீதிமன்றத்தின் மூலம் புகாரை பதிவு செய்ய ஏற்பட்ட 10 மாதம் காலம் ஏற்பட்டது என்றால் தெரியாது. களப்பணியாளர் விசாரணை செய்து யார் மீது தவறு உள்ளது என்று சொல்லியுள்ளரா என்றால் சொல்லவில்லை, முதல் தகவல் அறிக்கை மூலமாக தெரியவந்தது.

களப்பணியாளர் மேற்படி விசாரணையில் சாட்சியங்களை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒரு வழக்கில் இரண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டாலும், அந்த வழக்கில் போலிசார் விசாரணையை முடித்து தாக்கல் செய்யும் இறுதி அறிக்கையை தான் எடுத்து கொள்ளவேண்டும் என்றால் சரிதான். ஒரு சம்பவத்திற்கு இரண்டு தகவல் அறிக்கை பதிவு செய்யலாம் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது என்றால் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் சாட்சியங்களின் அடிப்படையில் தான் இழப்பீடு வழங்கப்படும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள தகவல்கள் நிறுவனத்திற்கு கட்டுப்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**